விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 113 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை (11.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய உடைப்பு தொடர்பான வழக்கு
### எதிர்வரும் 24ஆம் திகதி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய உடைப்பு தொடர்பான வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்கு நாறி மலை. ஆதி சிவன் ஆலய விக் கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணைகள் நேற்று வவு னியா நீதவான் நீதிமன்றில் இடம் பெற்றது.

இதன்போது பொலிஸார் விக்கிரகங் கள் உடைக்கப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கையினை மன்றில் சமர்ப்பித்ததுடன்,

15

## உள்ளூராட்சி தேர்தல் ஏப்ரல் 25 இடம்பெறாது
### தேர்தல்கள் ஆணைக்குழுவின் சந்திப்பின் பின் இராஜாங்க அமைச்சர் ஜானக

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர் வரும் 25ஆம் திகதி இடம்பெறாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும்

15

# வெடுக்குநாறி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்
## இந்திய உயர்ஸ்தானிகர் உறுதி

(கொழும்பு)

**வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விவகாரம் தொடர் பில் உரியவர்களுடன் பேசி தேவையான நடவடிக்கை எடுக் கப்படும் என இந்திய உயர்ஸ் தானிகர் கோபால் பாக்லே உறுதி யளித்துள்ளார்.**



வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் மற் றும் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் இந் திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்களுடன் ஆலய நிர்வாகத்தினர்

15

## மட்டுவிலில் தாடியினால் வாகனம் இழுத்து சாகசம்



15

## இந்தியத் தூதுவருடனான சந்திப்பு திருப்தி
### வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர்

(கொழும்பு)

இந்திய தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக் அமைந்ததாகவும் விரைவில் தீர்வு கிடைக்க ஆவன செய்வார் என எதிர்பார்ப்பதாகவும் வெடுக்குநாறி ஆலய நிர்வாக உறுப்பினரொருவர் தெரி வித்தார்.

15

## சாதாரண தர பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர பத் திர சாதாரணப் பரீட்சை ஒத்தி வைக்கப்படவுள்ளதாக பரீட்சை கள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அதன்படி, முன் னதாக எதிர்வரும்

15

## நீதிமன்ற வழக்கு முடியும்வரை வெடுக்குநாறி விடயத்தில் தலையிடோம்
### பௌத்த சாசன அமைச்சர் விதுர

(கொழும்பு)

நீதிமன்றத்தில் வழக்கு முடியும்வரை வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் தலை யிட முடியாது என பௌத்த சாசன அமைச்சர் விதுர விக் கிரமநாயக்க தெரிவித்துள் ளார்.

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர் வாகத்தினர் நேற்றைய தினம் பௌத்த சாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது ஆலய விட யம் தொடர்பில் கலந் துரையாடப்பட்டது.

15



## பொலிகண்டி கடற்கரையில் 84 கிலோ கஞ்சா மீட்பு

6ஆம் பக்கம் பார்க்க

## அரிய தமிழ்க் கல்வெட்டு சண்டிலிப்பாயில் கண்டுபிடிப்பு



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்மேற்கு சொத் துப்புடிச்சி கிராமத்தில் அரிய தமிழ்க் கல்வெட்டு ஒன்று அக் கிராம மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது

கடந்த வாரம் சிறிய பற்றை கள் நிறைந்த இடத்தைத் துப் புரவு செய்தபோது அழி வடைந்த கட்டட அழிபாடு களிடையே இக்கல்வெட்டை அடையாளம் கண்ட மக்கள் அதுபற்றி தமது கிராமசேவகரிடம்

15

## மன்னாரில் ஒருவர் அடித்துப் படுகொலை

(மன்னார்)

மன்னார் சாந்திபுரம் பகுதியில் ஒரு வர் அடித்துப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

இதில் மன்னார் எமில்நகர் பகுதி யைச் சேர்ந்த சத்தியா (வயது-34) என்ப வரே படுகொலை செய்யப்பட் டுள்ளார்.



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு 07 – 04 – 1954

இறப்பு 10 – 04 – 2023

## கந்தையா மகாலிங்கம்

உரிமையாளர் – மனோஜினி மரக்காலை (மந்திகை)

நவிண்டில் மொட்டயதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் உப்புக்கிணற்றடி நவிண்டில், கரணவாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மகாலிங்கம் அவர்கள் நேற்று (10.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் வாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் மகாஜினி (லண்டன்), வாகீசன் (சுவிஸ்), மகாஜன், வனஜா (பேராதனைப் பல்கலைக்கழகம்), மனோஜா (பேராதனைப் பல்கலைக்கழகம்), மனோஜினி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), வனோ ஆகியோரின் அன்புத் தந்தையும் இராகுலன் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமனாரும் மேகவி, முகின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-6330)

உப்புக்கிணற்றடி,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

தகவல் :-
குடும்பத்தினர்
077 213 1882

## அரசின் திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டு தலைவர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

பொருளாதாரம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசாங்கத்தின் முக்கிய அபிவிருத்திகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளி நாட்டு தூதரகங்களின் தலைவர்களுக்கு விளக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நேற்று வெளிவிவகார அமைச்சின் வளாகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நிலைமை, நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள், உத்தேச உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறை மற்றும் நிலையான வளர்ச்சியை இலக்காகக் கொண்ட பரந்த பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து தூதுக்குழு தலைவர்கள் புதுப்பிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் சப்ரி தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-7.9)


## கடை வாடகைக்குத் தேவை

சுன்னாகம், சங்கானை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, நெல்லியடி நகரப் பகுதியை அண்மித்த பகுதியில் 10 × 20 அடி அகலமுள்ள கடை வாடகைக்குத் தேவை.

தொடர்பு (15208)

077 978 9223

## வெப் இயந்திர இயக்குநர்கள் பயிலுநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அச்சக நிறுவனம் ஒன்றிற்கு

- வெப் இயந்திர இயக்குநர்கள் ( அனுபவம் உள்ளவர்கள் )
- பயிலுநர்கள் ( க.பொ.த.சா.தரம் )

யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு (அ)

076 097 3121


# மரண அறிவித்தல்



## தம்பித்துரை பாலச்சந்திரன்

( ஓய்வுபெற்ற அரச நில அளவையாளர்,
ஈழத்து சீரடி அறங்காவலர்,
முன்னாள் தலைவர் வேம்படி முருகமூர்த்தி கோவில் )

**பிறப்பு : 08.01.1948 இறப்பு : 10.04.2023**

தாவடி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (10.04.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - இரத்தினம் தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கருனாகடாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் தர்மேஸ்வரி (பொன்னான்) அவர்களின் அன்புக் கணவரும் ராகவன் (ஆசிரியர் - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி அரியராசா, தனபாலசிங்கம், பரமேஸ்வரி துரைசிங்கம் மற்றும் தங்கேஸ்வரி பாலச்சந்திரன் ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி பரமநாதன், சரஸ்வதி பொன்னம்பலம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.04.2023) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் கொக்குவில் தாவடியில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(15217)

வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில். 077 481 5336

தகவல் :-
பா. ராகவன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் ஜனநாயக பரப்பிலும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு இருக்கும் உரிமைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை செலுத்தக் கூடியதாக இருப்பதால், இச்சட்ட மூலத்தைச் சமர்ப்பித்து குறித்த மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

எந்தவொரு சட்ட சீர்திருத்தத்திலும் அடிப்படை உரிமைகள் மற்றும் குடிமக்களின் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலமைப்பின் பிரகாரம், மக்களின் அதிகாரம் அவர்களின் பயனுக்காகவே அரசாங்கத்துடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இவ்விரு குறிக்கோள்களையும் அடையத் தவறுகிறது.

அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டிருக்கும் புதிய சட்டமூலம், அது பதிலீடு செய்ய உத்தேசிக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் விட மிகவும் மோசமான பல அம்சங்களை கொண்டதாக இருக்கிறது.

இச்சட்டமூலத்தின் ஏற்றுக் கொள்ளமுடியாத பல அம்சங்களில், பயங்கரவாதத்துக்கு அது கொடுக்கும் தெளிவற்றதும் விசாலமானதுமான வியாக்கியானம் மிகவும் முக்கியமானதாகும்.

அரசாங்க சொத்துக்களை, ஏன் தனியார் சொத்துக்களையும் கூட களவாடுவதையும் தொழிற்சங்க நடவடிக்கையையும் இச் சட்டமூலம் "பயங்கரவாதச் செயல்கள்" என்று வியாக்கியானப்படுத்துகிறது.

யார் யாரை கைது செய்ய முடியும்? அவர்களை யாரால் கைது செய்ய முடியும்? எந்த நோக்கத்துக்காக அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்? இப்படியான விடயங்களை பொறுத்தவரையில் சட்டமூலம் மிகப் பரந்தளவுக்கு இடங்கொடுப்பதாக அமைகிறது.

எதிர்ப்பு காட்டுதல், பிரசுரங்களை வெளியிடுதல், அரசாங்கத்திடம் இருந்து நடவடிக்கைகளை எதிர்பார்த்து கோரிக்கைகளை முன்வைத்தல் மற்றும் இன, மதத் தலங்களுடன் தொடர்புடைய தகராறுகள் உட்பட பெருவாரியான, நியாயபூர்வமான நடவடிக்கைகளை இச் சட்டமூலம் பயங்கரவாத வீச்செல்லைக்குள் கொண்டு வருகிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் இல்லாவிட்டால் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் அடிப்படை மனித உரிமை மீறல்களைச் செய்வதற்கும் குறைகளைச் சுட்டிக்காட்டி கண்டிப்பவர்கள் மற்றும் எதிர்க் கருத்து கொண்டவர்களை மௌனமாகவதற்கும் அந்தச் சட்டம் அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் என தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# விலங்குகளுக்கு தீங்கு ஏற்படாமல் பட்டாசுகளை வெடிக்க வையுங்கள்

## சுற்றாடல் ஆர்வலர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பட்டாசு வெடிக்கும் போது விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் சுற்றாடல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒலி எழுப்பும் சில பட்டாசுகள் விலங்குகளின் கேட்கும் உறுப்புகளை சேதப்படுத்துவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், வீட்டில் வாழும் சில விலங்குகள் பட்டாசு சத்தத்திற்கு பயந்து வீதியில் ஓடுவதுடன் விபத்துக்களில் கூட சிக்கும் வாய்ப்பும் காணப்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் நயனக ரன்வெல்ல தெரிவித்துள்ளார். (நி)

# எரிபொருட்களின் விலையில் மீண்டும் மாற்றம்?

(கொழும்பு)

நாட்டிற்கு வரும் வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தற்போதைய எரிபொருள் விலையை விட குறைந்த விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு மூன்று நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான ஒப்பந்தங்கள் இம்மாத இறுதியில் பூர்த்தி செய்யப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடெட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்.எம். பார்க்ஸ் என்ற மூன்று நிறுவனங்களுக்கு இலங்கையில் எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையை விட கணிசமான குறைந்த விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, இது தொடர்பாக அந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு இடையே அரசு தரப்பு உடன்பாடு எட்டப்பட்டு அதன் பிறகு குறைந்த விலையில் எரிபொருளை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட உள்ளது. (நி)

# கோட்டாவை ஜனாதிபதியாக தெரிவு செய்தது தவறு

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன

(கொழும்பு)

2019 இல் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்ததன் மூலம் தாம் "தவறு" செய்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒப்புக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்ததன் மூலம் அப் பிழை திருத்தப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போட்டியிட்டு வெற்றி பெறும் என்றும் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் சுகாதார அமைச்சராகவும் போக்குவரத்து அமைச்சராகவும் பவித்ரா வன்னியாராச்சி செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஜூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்ய முடியும்

## மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்

(கொழும்பு)

கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை இலங்கையால் ஜூன் மாதத்திற்குள் பூர்த்தி செய்ய முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான முதலாவது உதவித் திட்டம் குறித்த மறுஆய்வு செப்டெம்பரில் இடம்பெறவுள்ள நிலையில் மூன்று மாதங்களிற்கு முன்னர் இலங்கையால் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியும் என இந்திரஜித் குமார சுவாமி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பினை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்த பரந்துபட்ட இணக்கப்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரால் வர முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜூன் மாதத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்மறுசீரமைப்பு பூர்த்தியாகும் என எதிர்பார்க்கின்றேன். அதனை எவ்வாறு முன்னெடுப்பது என்ற இணக்கப்பாடு எட்டப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)



# பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடு சட்டமூலம் வெளிப்படைத்தன்மை இல்லையென விமர்சனம்

(கொழும்பு)

இலங்கையின் கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடு செய்ய முன்மொழியப்பட்டிருக்கும் சட்ட மூலத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என இலங்கை மற்றும் மாலைதீவிற்கான தூதுவர் டெனில் சைபி விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

ஜி.எஸ்.பி பிளஸ் வர்த்தக சலுகைகளை வழங்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண்டிய முடிவிற்கு முன்னதாகவே இந்த புதிய மாற்றுச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தை ஏற்காது ஜி.எஸ்.பி பிளஸ் ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறினால், இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகச் சலுகை கிடைக்காமல் போகக்கூடும்.

ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புகளை அடையாளப்படுத்தும் போது நீதித்துறை மற்றும் பொது மக்களது தகவல்களின் அடிப்படையிலான செயல் முறையால் முன்னெடுக்கப்படுகிறது.

எனினும் இலங்கையில், இந்த செயல்முறை மிகவும் குறைவான வெளிப்படைத் தன்மையை கொண்டுள்ளது என்றும் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான தூதுவர் தெரிவித்துள்ளார். (நி)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்; இறுதித் தீர்மானம் இன்று

(கொழும்பு)




உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடவுள்ளது.

மேலும், தேர்தலை நடத்துவதற்கு அதிகாரிகளிடம் தொடர்ந்து பணம் கோரியதற்கு உரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கும் பதில் கிடைக்கவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபக் சாஹர், பென் ஸ்டோக்ஸ் விளையாடுவதில் சந்தேகம்

சென்னை சுப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே) ஐ.பி.எல் அணி வீரர்கள் தீபக் சாஹர், பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் காய மடைந்துள்ளனர்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக மும்பை வான்கடே ஸ்டேடிய த்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற லீக் ஆட்டத்தின் போது தீபக் சாஹ ருக்கு தசை நார் முறிவு ஏற்பட்டது.

இதனால் அவர் முதல் ஓவரிலேயே ஆட்டத்திலிருந்து வெளியேறினார்.

அதேபோல், பென் ஸ்டோக் ஸுக்கு பாதத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. இத் தகவலை சி.எஸ்.கே அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. சி.எஸ்.கே அணி அடுத்ததாக நாளை சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ராஜஸ்தான் அணிக் கெதிராக விளையாட வுள்ளது. அந்தப் போட்டியில் இந்த 2 வீரர்களும் பங்கேற் பார்களா என்பது சந்தேகம். (4)


# மணிவிழா வாழ்த்து



கிளி/கனகாம்பிகைக்குளம்
அ.த.க. பாடசாலை அதிபர்

## திருமதி இந்திராதேவி சுந்தரமூர்த்தி ( SLPS -1)

அவர்கள் தனது 38 வருட ஆசிரியர், அதிபர் பணியை நிறைவு செய்து பணி ஓய்வுபெற்று மணிவிழா காண்கிறார். 15.04.1985 தொடங்கி இன்று வரை ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக பணியாற்றி ஓய்வுபெறும் அவரது ஓய்வுக்காலம் சிறக்க மணிவிழா நாளில் பணிநயந்து வாழ்த்துகின்றோம்.

**அதிபர்கள் சங்கம்**
**கிளிநொச்சி மாவட்டம்**

(C-6334)


# மரியதாஸ், மேரி றெஜினா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்

## சக்கோட்டை சென் சேவியர் சம்பியன்




மரியதாஸ், மேரி றெஜினா ஞாப கார்த்த மாக இடம்பெற்ற உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

மரியதாஸ், மேரி றெஜினா ஞாப கார்த்தமாக பொற்பதி சமூக சேவை ஒன்றியத்தின் ஊடாக பருத்தித்துறை லீக் அனுமதியுடன் பொற்பதி சென். பீற்றர் விளை யாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் அதன் தலைவர் தலை மையில் இடம் பெற்றது.

பெற்று இறுதிப் போட்டிக்கு தெரி வான சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகம் மற்றும் யங் லயன் அணியும் மோதியதில் சக்கோட்டை சென் சேவியர் அணி ஒரு கோலை போட்டு வெற் றியை தனதாக்கியது.

வெற்றி பெற்றவர்களுக்கான கேட யங்கள், பதக்கங்கள், பணப் பரிசில்கள் என்பன விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை நீண்ட தூர ஓட்டம், முட்டியுடைத்தல், கிடுகு பின்னுதல், கயிறிழுத்தல் போன்ற விளை யாட் டுக்கள் நேற்று காலை முதல் இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டிய வீர வீராங்கனை களுக் கான பரிசில்கள், பணப் பரிசில்கள் என்ப னவும் விருந்தினர்களால் வழங்கி வைக் கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட த்தின் பல்வேறு பிரதே சங்களின் விளை யாட்டு வீர வீராங்கனைகள், ஆர்வலர் கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்ட னர். (4-6-104)


# Our Deepest Condolences...



## Mrs.Gowri Ketheeswaranathan

**AUGUST 16 1952 - APRIL 9 2023**

We express our heartful Condolences on the demise of beloved mother of our director

## Mr.Pirapaharan Ketheeswaranathan

We extend our sympathies to the member of the bereaved family and may the deceased soul rest in peace

(15218)

**Director, Staffs**
**Pearson International College &**
**Can lanka Immigration Service**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 அரச ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் விடுமுறை

(கொழும்பு)

அரசாங்கத்தில் பணியாற்றிய 2000 ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.

ஐந்தாண்டு ஊதியம் இல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைக்காக 30 ஆயிரம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2,000 விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 22 ஆம் திகதி அரச ஊழியர்களுக்கு 5 வருட காலத்திற்கு வெளிநாடு செல்வதற்கான சுற்றறிக்கையை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டிருந்தது.

அதன்படி, கடந்த 1 ஆம் திகதி வரை உள்நாட்டு விடுமுறைக்கான 150 விண்ணப்பங்களும் வெளிநாட்டு விடுமுறைக்கான 1000 விண்ணப்பங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இந்தத் தொகை அதிகரிக்கலாம் என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல அரச ஊழியர்கள் கொரியாவுக்குச் செல்வதற்காக வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்றனர் மற்றும் பெரும்பாலான விண்ணப்பங்கள் மொழிப் பிரச்சினை காரணமாக நிராகரிக்கப்படுகின்றன.

எனினும், மொழியைக் கற்றுக் கொண்ட பிறகு மீண்டும் விண்ணப்பிப்பார்கள். அதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். அதன்படி, வெளிநாட்டு விடுப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என அவர் தெரிவித்தார். (நி)

# தக்காளி-கத்தரிக்காய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் தக்காளி மற்றும் கத்தரிக்காயின் விலை நேற்று முன்தினம் முதல் அதிகரித்துள்ளதாக ஹற்றன் பிரதேச மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நாட்களில் ஏனைய மரக்கறிகளின் விலைகள் கணிசமான அளவில் குறைந்துள்ள நிலையில், கடந்த காலங்களில் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி 250 ரூபாவையும் 200 ரூபாவாக இருந்த கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 350 ரூபாவையும் எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைக் காலங்களில் சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றமையால் தக்காளி மற்றும் கத்தரிக்காய் விலை உயர்ந்துள்ளதாக விற்பனையாளர்கள் மேலும் தெரிவித்தனர். (நி)

# ஸஹ்ரானின் மைத்துனர் மீண்டும் கைது

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸஹ்ரான்ஹாசிமின் மைத்துனர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டிய - கட்டுபொத்த பிரதேசத்தில் இருந்து நீர்கொழும்பு - கொச்சிக்கடை பிரதேசத்தில் உள்ள தனது மனைவியின் பெற்றோரின் வீட்டிற்குச் சென்ற போதே கொச்சிக்கடை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவரது மனைவியும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள், நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், ஏப்ரல் 21 தாக்குதலின் பிரதான சூத்திரதாரியென கருதப்படும் ஸஹ்ரான்ஹாசிமின் மனைவி பாத்திமா காதியாவின் சகோதரர்களில் ஒருவரென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகத்தின் பேரில் கொச்சிக்கடை பொலிஸாரால் இந்தத் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

# திருமலையில் ஒருவரின் உயிரை பறித்த அரச பேருந்து

(திருமலை)

திருகோணமலை கந்தளாய் பிரதான வீதி சர்தாபுர பகுதியில் துவிச்சக்கர வண்டியுடன் அரச பேருந்து மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. திருகோணமலையிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மஞ்சள் கோட்டை கடக்க முற்பட்ட துவிச்சக்கரவண்டியுடன் மோதியதினாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில் திருகோணமலை சர்தாபுரம்- ஆறாம் கட்டை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.ஏ.வசந்த (36 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளை சீனக் குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறிக்க விபத்துடன் தொடர்புடைய சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் மணல் அகழ்வு; நேரில் ஆராய்ந்த சுமந்திரன்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பாக்கு திடல் பகுதியில் இடம் பெற்று வரும் மணல் கடத்தல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் அப்பகுதிக்கு விஜயம் செய்து அப்பகுதி நிலைமை தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

மேற்படி பகுதியில் இடம் பெற்று வரும் மணல் கடத்தல் மற்றும் மணல் திருட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக அப்பகுதிக்கு சென்ற அவர் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில், அம்பன் பிரதேசத்திலே பெரிதான மணல் திட்டுகள் இருக்கின்றது.

ஆனாலும் நாங்கள் இன்று போய் பார்வையிட்ட போது பெரிய அளவிலான மணல்கள் ஏற்கனவே சூரையாடப்பட்டுள்ளன.

இதை அனுமதிக்க முடியாது. எங்களுடைய வளங்கள், எங்களுடைய உயிரைப் பாதுகாப்பதான வளங்களை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (4-6-60)



ஈழுத்து சீரடியான் அறக்கட்டளையினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ரூபாய் 6 இலட்சம் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.
(படம்:-சிவசாந்தன்)



"குவியம் மொபைல் குறும் படப்போட்டி -2023" இன் விருது வழங்கல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

"உயிரைக் கொல்லும் போதைப்பொருள்" என்ற கருப்பொருளில் நடத்தப்பட்ட இந்தக் குறும்படப்போட்டிக்கு நாடளாவிய ரீதியில் இருந்து 63 குறும்படங்கள் கிடைக்கப் பெற்றன.

அவற்றில் சிறந்த 10 குறும்படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் இயக்குநர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.
(படம்:-சிவசாந்தன்)

## யாழ்.பாரம்பரிய உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மக்களிடையே அருகி வரும் பாரம்பரிய உணவுப் பழக்கத்தை மேம்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும் உணவுத்துறை முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி, அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் யாழ்.மாவட்டச் செயலகம் நடத்தும் "யாழ். பாரம்பரிய உணவுத்திருவிழா - 2023" என்னும் நிகழ்வு எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் அனைவரும் அந் நிகழ்வில் பங்குபற்றி பாரம்பரிய உணவுவகைகளை ருசித்து, பாரம்பரிய இசையை கேட்டு மகிழுமாறு யாழ். மாவட்டச் செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. (4-6-33)

## வடமராட்சிப் பகுதியில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை

### மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி

(அராலி)

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டதில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பெண் ஒருவர் படுகாயம் அடை ந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக மருதங்கேணிப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு வினவிய போது, அவ்வாறான சம்பவங்கள் எவையும் நடைபெறவில்லை என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், குறித்த பகுதியில் கசிப்பு விற்பனை நடப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது அப்பகுதி மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. ஆனால் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவும் இல்லை, எவரும் காயம் அடையவும் இல்லை என தெரிவித்தார். (4-6-104)



அராலி சிறீ முருகன் சனசமூக நிலையத்தின் 83 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டிகள் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன நடைபெற்றன.
(படம்:-கஜிந்தன்)



அனைத்துலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு அண்மையில் பசுந்தேசம் அமைப்பினரால் கைதடியில் உள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.
(படம்:-சுபேசன்)

## பொலிகண்டி கடற்கரையில் 84 கிலோ கஞ்சா மீட்பு



(அராலி)

யாழ்ப்பாணம் பொலிகண்டி கடற்கரையில் 84 கிலோ கிராம் கேரளக் கஞ்சா நேற்று திங்கட்கிழமை அதிகாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த கடற்படையினர் கேரளக் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-33-104)

### தெல்லிப்பழை

## துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை. ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு வழுந்துப் பானை வைத்தலுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு அம்பாள் வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம் பெறவுள்ளது என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார். (4-6)



சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில், விளையாட்டுத் திணைக்களம் - வடமாகாணத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கான சதுரங்க பயிற்சி வகுப்பு கடந்த 8 ஆம் திகதி எழுதிரள் பணிமனையில் ஆரம்பமாகியது.
(படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.ம.ச-ஐ.தே.க இணைந்து செயற்பட வேண்டும்- மயந்த

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இணைந்து செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேறிச் செல்லும் எவ்வித எண்ணங்களும் கிடையாது.

இரண்டு கட்சிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் ஊடாக இணைந்து செயற்படுவதே உசிதமானது என்பது எமது நிலைப்பாடு.

இரண்டு கட்சிகளினதும் கொள்கைகள் ஒன்று என்பதனால், அதன் நலன்கள் வேறு தரப்பிற்குச் செல்லக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

கடும்போக்குவாத சக்திகளுக்கு மறைமுகமாக வேனும் ஆதரவு வழங்குவது பொருத்தமற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், மயந்த திஸாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்த 1500 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## நுகர்வோர் அதிகார சபை அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

**பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களை பதுக்கி வைத்தமை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட 1500 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.**

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்கின்றமை, அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்கின்றமை உள்ளிட்ட பல குற்றச் செயல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன.

விசேட சுற்றிவளைப்பின் போது முட்டை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

விசேட சுற்றிவளைப்புகளுக்காக மேலதிக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், விடுமுறை தினங்களிலும் இரவு நேரங்களிலும் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி)

# ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 311.63 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 327.72 ரூபாவாகவும் பதிவாகியுள்ளன. இதேவேளை, ஏனைய நாணயங்களிற்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று உயர்வடைந்து காணப்பட்டது. (நி)

# போலித் தாள்களின் புழக்கம் அதிகரிப்பு மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

புத்தாண்டுக் காலத்தில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக பொதுமக்கள் கவனம் செலுத்துமாறு பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தகர்கள் இந்த நாணயத்தாள்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

# 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கையிருப்பில் இருக்க வேண்டும்

## நிதி நிபுணர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை. மூன்று மாதங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான தொகைக்கு சமமான 6.5 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று நிதி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கையிருப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், துறை சார்ந்த வல்லுநர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றாலும் வெளிநாட்டு கையிருப்பை 6.5 பில்லியன் அமெரிக்க டொலரை விட அதிகமாக அதிகரிக்குமாறு அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு நிதி நெருக்கடியின் உச்சத்தில், இலங்கையின் கையிருப்பு சில நாட்களில் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாக காணப்பட்டது.

அத்துடன், எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நிதியை வெளியிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி போராடியது.

எவ்வாறாயினும், கடந்த சில மாதங்களில், நிலைமை கணிசமான அளவில் மேம்பட்டுள்ளதுடன், மார்ச் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோக பூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துக்கள் 2.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கும் நிபுணர்கள், 6.5 முதல் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். (நி)

# இராசிபலன்

11.04.2023
பங்குனி 28, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி காலை 6.53 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.57 மணிவரை

கேட்டை பிற்பகல் 12.30 மணிவரை
சுபநேரம் -10.36-12.06 மணிவரை
இராகுகாலம்- 3.06-4.36 மணிவரை

சந்திராஷ்டமம்- கார்த்திகை,ரோகிணி

வளவன்


மேஷம்

அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்,வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும்.


கடகம்

பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.


துலாம்

இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மகரம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்,வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம்.


சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


கும்பம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,காரிய அனுகூலமுண்டு.


கன்னி

இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

சோம்பலை விலக்குவது நல்லது, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரும், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை


மீனம்

மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

மனிதனை பாவ காரியத்தில் இழுத்து விடுவது ஆசையும் கோபமும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை வருடப்பிறப்பன்று இரதோற்சவம் காணும் மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான்



மானிப்பாய் அருள்மிகு மருதடி விநாயகர் ஆலயம் இலங்கையில் மட்டுமன்றி அண்டை நாடான இந்தியாவிலும் புகழ் பரவிய ஓர் ஆலயமாகும்.

கழியும் வருஷத்தையும் பிறக்கும் வருஷத்தையும் இணைத்து விழா எடுப்பது மருதடி விநாயகர் தான் என்பது பெருமையாகும்.

பேர் பெற்ற தமிழ் அரசரெல்லாம் யாழ்ப்பாணத்தை ஆயிரத்து ஐந்நூறு வருஷத்திற்கு மேல் ஆண்டார்கள். இக்காலத்தில் ஒரு தபசிரேஷ்டரானவர் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து சமாதி ஆகிவிட்டார்.

மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாயகர் ஆலயத்தை இடித்து சவக்காலையாக்கி விட்டனர். மகான் சமாதியடைந்த இடமும் இப்பொழுது மூலஸ்தானத்திற்கு கிழக்கில் இருப்பதுமாகிய மருத மரத்தின் கீழ் இராக்காலங்களிலும் பறங்கியர் கண்களுக்குப் புலப்படாத நேரங்களிலும் பக்தர்கள் பொங்கலிட்டு கற்பூரமெரித்து விநாயகரை வழிபட்டு வந்தார்கள்.

இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளைக் கடந்து வரும் காலகட்டத்தில் பல வருடங்களின் பின்னர் பறங்கியரின் அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது.

ஒல்லாந்தர்அரசு காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விசேடமாகவும் பகிரங்கமாகவும் நடந்து வந்தன.

இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசக் குருக்கள் நவாலி தூக்கிணி வைரவர் கோவிலடியில் இருந்து சிவபூசை வணக்கம் செய்து வரும் நாட்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகின.

இக்கோவிலில் பெருந்தொகையான ஆடுகள் வெட்டப்படுமென்று பெரியவர் கேள்விப்பட்டார்.

உடனே அவ்விடத்தை விட்டு அகன்று மானிப்பாய் நகரிலுள்ள மருதஞ் சோலையை அடைந்தார்.

அங்கு எமது கொப்பாட்டன் சுவாமிநாத முதலியாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட்டியிருந்தார்.

அவ்விடத்தில் மக்கள் பொங்கல் வணக்கம் செய்து வந்தமை கண்டு ஓர் விநாயகர் சிலை வைத்து பூசைக் கிரமங்கள் செய்து வந்தார். பின்னர் சுவாமிநாத முதலியாரின் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டி முடித்து பங்குனி மாதத்தில் மஹோற்சவத்தை ஆரம்பித்து சித்திரை முதலாம் திகதியில் வருஷம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார்.

பின்னர் ஒல்லாந்தரின் அரசு முடிந்து ஆங்கிலேயரின் அரசு உதயமானது.

புது வருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப் பெருமான் விசித்திர அலங்காரம் அமைக்கப் பெற்ற இரதத்தில் ஏறி வலம் வருகின்ற காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர்.

மேற்படி இரதம் திருவாவலங்காட்டில் வாழ்ந்த பிரம்ம ஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகீஸ்வரர் சங்கர சுப்பையா சுவாமிகளால் நன்கு மதிக்கப் பெற்று அவரை இலங்கைக்கு தரிசனம் கொடுக்கச் செய்தது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதடியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி வருடப் பிறப்பன்று இரதோற்சவம் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து இரண்டாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது.

**சுவாமிநாதன் தர்மசீலன்,**
**சமாதான நீதிவான்**

# நள்ளிரவில் இடிந்து விழுந்த கட்டடம்
## மீட்புப் பணிகள் தீவிரம்



(பாரிஸ்)

பிரான்ஸின் துறைமுக நகரமான மார்சேயில் நள்ளிரவில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து. தீ விபத்திற்கு உள்ளாகியுள்ளது.

கட்டட இடிபாடுகளில் உள்ளவர்களை மீட்பதற்கு தீவிரமாக முயற்சி செய்து வருவதாக தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியில் தீவிபத்தும் ஏற்பட்டுள்ளதால் மீட்புப் பணிகளில் சிரமத்தை எதிர்நோக்குவதாக மீட்புப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணிக்கு நேர்ந்த இந்த அனர்த்தத்தில் எத்தனை பேர் சிக்கியுள்ளார்கள் என்பதை அறியமுடியவில்லை எனவும் உயிரிழப்பு அல்லது சேத விபரங்களை மதிப்பிட முடியவில்லை என்றும் மீட்புப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# வங்கக்கடலில் ஒரே நாளில் 4 முறை நிலநடுக்கம்
## பீதியில் உறைந்த அந்தமான் நிகோபார் தீவு மக்கள்

அந்தமான் நிகோபார் தீவு அருகே கடலுக்கு அடியில் அடுத்தடுத்து 4 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்தமான் நிகோபார் தீவில் உள்ள கேம்ப் பெல் பே என்ற பகுதியின் வடக்கில், நேற்று நண்பகல் 1.15 மணி அளவில் சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோளில் 4.9 ஆக பதிவானது.

இதனை தொடர்ந்து மதியம் 2.59 மணி அளவில் நிகோபார் தீவு அருகே சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோளில் 4.1 ஆக பதிவானது.

3 ஆவது முறையும் நிகோபார் தீவு அருகே 10 கிலோ மீற்றர் ஆழத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 5 .3 ஆக பதிவானது. 4 ஆவது முறையாக நிகோபார் தீவில் கடலுக்கு அடியில் ரிக்டர் அளவில் 5.5 ஆக பதிவானது.

வங்கக்கடலுக்கு அடியில் தொடர்ந்து 4 முறை நில நடுக்கம் ஏற்பட்ட நிலையில், இருப்பினும் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால், பொதுமக்கள் சற்று அச்சம் அடைந்துள்ளனர். (நி)

## ஈரானில் ஒரு மாதத்தில்
# 5 ஆயிரத்திற்கும் அதிக மாணவிகள் நச்சுத் தாக்குதல்களால் பாதிப்பு

(டெஹ்றான்)

ஈரான், ஹஃப்டகல் என்ற பிரதேசத்திலுள்ள மகளிர் பாடசாலை மாணவிகளுக்கு எதிராக கடந்த சனிக்கிழமை நச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கத்துக்குச் சொந்தமான ஐ.ஆர்.ஐ.பி என்ற ஊடகத்தை சுட்டிக்காட்டி, ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் குறித்த பாடசாலையைச் சேர்ந்த சுமார் 60 மாணவிகள் பதற்றம், மூச்சுத் திணறல் மற்றும் தலைவலி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர் என்றும் ராய்ட்டர்ஸ் குறிப்பிட்டுள்ளது.

ஈரானில் கடந்தாண்டு நவம்பர் மாதம் முதல் பாடசாலை மாணவிகளை இலக்கு வைத்து நடத்தப்படும் நச்சுத் தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன.

கடந்த மாதம் மார்ச் 7 ஆம் திகதி அறிக்கையிடப்பட்ட தகவல்படி, சுமார் 230 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 5,000 இற்கும் அதிகமான மாணவிகள் நச்சுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அது தொடர்பான இறுதி அறிக்கை, எதிர்வரும் இரு வாரங்களில் வெளியிடப்படும் என்று குறித்த சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் ஹமிட்ரேஸா காஸிமி தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டுக்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் சிக்கினார்

### உதவிய குற்றச்சாட்டில் 7 பேர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் கடந்த வாரம் வீட்டு உபகரணங்களை திருடிய குற்றச்சாட்டு மற்றும் வீதியால் சென்றவரின் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டில் தருமபுரம் பொலிஸாரால் தேடப்பட்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் ஹயஸ் வாகனம் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இதன்போது குறித்த சந்தேகநபரிற்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த 4 பெண்கள் மற்றும் 3 ஆண்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-6-316)

## புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் வர்த்தக நிலையங்களில் சோதனை



(குருமன்காடு)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் நிறுவை, அளவைப் பிரிவினர் விசேட சோதனை நடவடிக்கையை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பேருந்து நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளிலேயே இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறிப்பாக வவுனியாவில் உள்ள சதொச விற்பனை நிலையம், காகில்ஸ் பூட்சிற்றி மற்றும் தனியார் பல்பொருள் விற் பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் என்பவற்றில் இவ் விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப்பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதி செய்யப்பட்ட பொருட்களின் நிறுத்தல் அளவைகள் சரியானவையா என்பது குறித்து அதிகாரிகளினால் பரிசோதனை முன்னெடுக்கப் பட்டிருந்தது. (4-6-250)

## தென்னையை ஆக்கிரமிக்கும் வெண் ஈ தாக்கம்

(தருமபுரம்)

வடமாகாணத்தில் பரவ ஆரம்பித்திருக்கும் தென்னை வெண் ஈ யை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் உள்ள தென்னை பயிர்ச் செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்

இதன் தாக்கம் இனிவரும் காலம் வடமாகாணத்தில் வெப்பமான காலநிலை என்பதால் வேகமாக பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

எனவே தென்னை செய்கையாளர்கள் தங்களுடைய தென்னை தோட்டங்களில் இவற்றின் தாக்கம் காணப்பட்டால் உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் . இவற்றின் தாக்கம் தென்னை மாத்திரம் இன்றி வேறு பயிர்களான கமுகு, தேக்கு, பப்பாசி போன்றவற்றையும் தாக்கக்கூடியது.

வெண் ஈ இன் தாக்கம் காணப்பட்டால் உடனடியாக கள உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்என தெரிவித்தார். (4-6-316)



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் அபிமானி விற்பனைச் சந்தை நேற்று இடம்பெற்றது. (படம்-யதுபாஸ்கரன்)

### போதைப்பொருள் பயன்படுத்திய மாணவர்களை

## உளவளத் துணை சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை

### யாழ். பல்கலை பேராசிரியர் ரவிராஜன்

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உளவளத் துணைச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம், பழம் றோட்டுப் பகுதியில் உள்ள தனியார் மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டமை மற்றும் போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மாணவர்களின் பெற்றோர்களுக்கும் நேரடியாக அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடை பெற்றுக் கொண்டிருப்பதனால், அவர்கள் நேற்று முன்தினமே விடுவிக்கப்பட்டிருந்தனர். எனினும், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நண்பகல் பரீட்சை முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் மாத்திரமே போதை மாத்திரை உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்தியசாலை வட்டாரங்கள், இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும் என்று தெரிவித்தன.(4-6-33)

### தேர்தல் நடத்தக் கோரி

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் உள்ளிட்ட வேட்பாளர்கள் நால்வர் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாடு பதிவு செய்த பின்னர் முருகவேல் சதாசிவம் அவர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. தேர்தல் ஒழுங்காக நடைபெறாவிட்டால் அந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை என்பது தான் அறிகுறி. இந்த நாட்டு மக்களை பிழையான வழியில் திசை திருப்பி, அவர்களுக்கு இங்கு பஞ்சம் இருப்பதை அடையாளம் காட்டிக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருப்பது ஒவ்வொரு மனிதனது அடிப்படை உரிமையையும் பறிக்கும் ஒரு செயலாகும்.

எனவே நான் கேட்டுக் கொள்வது யாதெனில் மக்களே உங்களது பிராந்தியத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தேர்தலை நடத்துமாறு கோரி முறைப்பாடு பதிவு செய்யுங்கள் எனத் தெரிவித்தார். (4-6-104)

## வடக்கு மாகாண தொழில்துறை வர்த்தக சந்தை நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண தொழில்துறை திணைக்களம் மற்றும் யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் "வடமாகாண தொழில்றுறை வர்த்தக சந்தை - 2023" நேற்று ஆரம்பமானது. யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வர்த்தக சந்தை இன்று, நாளை மூன்று தினங்கள் காலை 9 மணி முதல் இரவு 9மணி வரை இடம் பெறவுள்ளன.

வடக்கு மாகாண தொழில்றுறை திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ் இந்தியத் துணைத் தூதரக தலைமை நிர்வாக அதி காரி ராம் மகேஷ், வடமாகாண மகளிர் அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தேசிய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் நிஹால் தேவகிரி, ஹற்றன் நஷனல் வங்கியின் வடமாகாண பிராந்திய வர்த்தக தலைமை அதிகாரி நிஷாந்தன் கருணைராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் சுய தொழில் முயற்சியாளர்களாகவும் உற்பத்தியாளர்களாகவும் உள்ளவர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் இடம் பெற்றன. (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# மூட்டு வலியும் இயற்கை மருத்துவமும்

இன்று உலகத்தையே ஆட்டிப் படைக்கும் வியாதிகளில் கொடிய வியாதி மூட்டுவலி ஆகும்.

“ மூட்டு வாதம், எலும்பு மூட்டுக்களைத் தாக்கி இருதயத்தையும் கடிக்கும் ” என்பது மருத் துவப் பழமொழி.

ஆனால் மனிதன் சர்வ சாதாரணமாக நினைத்து வலி ஏற்படும் போது வலி நிவாரண மாத்திரைகளைச் சாப்பிட்டு வலிகளை அமுக்கி விடுகிறான்.

உண்மையில் வலி என்பது வியாதி அல்ல. இது ஒரு வியாதியின் அறிகுறியாகும். வலியினால் மனிதனை நடக்க முடியாமல், உட்கார முடியாமல், படுக்க முடியாமல் தவிக்க வைக்கும் கொடுமையான நோய் மூட்டு வலியாகும்.

இவ் வியாதி எமது உணவுப் பழக்கவழக்க மாறுபாட்டாலும் மற்றும் வாழ்க்கை முறை மாறுபாடுகளாலும் இளம் பருவத்திலேயே இவ்வியாதிகள் ஏற்பட வழிவகுக்கின்றது.

இன்றைய கணனி உலகில் வளரும் சிறார்களின் வாழ்க்கையின் முக்கிய நேரம், ஒரே இடத்தில் உட்கார்ந்து செலவிடுவதால் முதுகு வலி, நாரி வலி முதலிய நோய்கள் இளம் வயதிலேயே வர வழிவகுக்கின்றது.

எனவே வலி நிவாரணி மாத்திரைகளை அடிக்கடி மேற்படி நோய் நிலைகளில் பயன்படுத்தும் மக்களே பழைய கால உணவு முறைகளையும் கை வைத்திய முறைகளையும் சற்றுத் திரும்பிப் பாருங்கள்.

உதாரணமாக எண்பது வயதுடைய ஒரு வயோதிபரின் ஆரோக்கியமோ அல்லது அவர் செய்யும் வேலையோ தற்காலத்தில் 40-50 வயதுடைய ஒருவரால் செய்ய முடியாமைக்குரிய முக்கிய நோய் நிலைகளில் மூட்டுக்களில் வரும் நோய் நிலைமைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனவே உணவு வகைகளையும் அவற்றை உண்ணும் நெறி முறைகளையும் பின்பற்றி நாம் நோய்களைப் போக்கிக் கொள்ளலாம்.

**உள்ளுக்குள் எடுக்கக் கூடிய கை மருந்துகள்**

நொச்சிப் பூ, பூண்டு, மிளகு, இலவங்கம் சேர்த்து அரைத்து தினமும் காலை 1-2 கிராம் சாப்பிட்டு வர மூட்டுவலி தீரும்.

மதிய வேளை கீரையைச் சாப்பாட்டில் சேர்த்துவர மூட்டு வேதனைகள் தீரும்.

உழுந்தைப் பொரித்து இடித்து பொடி செய்து பனை வெல்லத்துடன் உண்ண முதுகு வலி தீரும்.

வாதராணி இலைச்சாறு 10-20 மில்லி லீற்றர் அல்லது அதன் வறையை உணவுடன் சேர்த்து வர மூட்டுக்களில் வலி தீரும்.

சுக்கு, காய்ந்த வில்வமிலை சேர்த்துப் பொடி செய்து 1-2 கிராம் வெந்நீருடன் எடுத்துவர மூட்டு வலி தீரும்.

சிற்றாமுட்டி வேர், அமுக்கிரா வேர் சேர்த்துப் பொடி செய்து 1-2 கிராம் வெந்நீருடன் எடுத்துவர மூட்டுவலி தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி சமவெடை சேர்த்து, தூள் செய்து வெல்லம், நெய் சேர்த்து உண்ண முதுகுவலி தீரும்.

**வெளிப்பிரயோகம்**

ப்பப்பாளி இலையை நல்லெண்ணெயில் வதக்கி முதுகில் தடவி வர வலி தீரும்.

50 மில்லி லீற்றர் வேப்பெண்ணெயில் 2 கிராம் கற்பூரம் சேர்த்து காய்ச்சி முதுகில் தடவ வலி தீரும்.

கடுகெண்ணெய் 100 கிராம், ஆமணக்கெண்ணெய் 500 கிராம், கற்பூரம் 2 கிராம் சேர்த்து காய்ச்சி முதுகில் தடவ முதுகுவலி குறையும்.

கடுகெண்ணெய் 100 கிராம், கற்பூரம் 2 கிராம் சேர்த்துக் காய்ச்சி கழுத்தில் தடவ கழுத்து வலி தீரும்.

**பற்று**

புளியமிலையை அரைத்து வீக்கத்திற்கு பற்றிடலாம்.

முடக்கொத்தான் கீரையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி வீக்கத்திற்கு பற்றிடலாம்.

முக்காவேளை, மஞ்சள் சேர்த்து மை போல அரைத்து வீக்கத்தின் மேல் கனமாக பற்றுப் போடவும் முழங்கால் வீக்கம் வாரும் வரை இடவும்.

நொச்சியிலையை சட்டியில் போட்டு தேக்கரண்டியளவு வேப்பெண்ணெய் விட்டு நன்றாக வதக்கி இளஞ்சூட்டுடன் வீக்கமுள்ள இடங்களில் வைத்துக்கட்டி மறுநாள் அவிழ்த்து மறுபடி இதே போல் கட்ட 3 நாட்களில் வீக்கம் வாடிவிடும்.

**ஒற்றடம்**

வாத நாராயணன் இலையை ஆய்ந்து ஒரு சட்டியில் போட்டு வேப்பெண்ணெய் விட்டு வதக்கி சூடு துணியில் கொட்டி சூடாக இருக்கும் போது வலியுள்ள இடங்களில் ஒற்றடம் கொடுத்தால் வாய்வும் மடிப்பும் நீக்கும். தேங்காய்த் துருவல், பாவட்டையிலை சேர்த்து சூடாயில்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வதக்கி துணியில் மூட்டை கட்டி பிடரியில் ஒற்றடம் கொடுக்க கழுத்து வலி தீரும்.

**மூலிகைக் குளியல்**

மூட்டு வலியால் வருந்துபவர்கள் கீழ்வரும் முறையில் மூலிகைக் குளியலைக் கடைப்பிடித்துவரின் மூட்டு வலிகளின் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

பாவட்டம் இலை, நொச்சியிலை,பருத்தியிலை , ஆமணக்கம் இலை, மாவிலங்கம் பட்டை, வேப்பம் பட்டை இவற்றை முதல்நாள் இரவே பெரிய பானையில் நீரில் ஊற விட்டு பின் மறுநாள் காலை அதனைக் கொதிக்க வைத்து இலைகளாலும் பட்டைகளாலும் மூட்டுக்களையும் வலியுள்ள இடங்களையும் உருவி, வெந்நீரில் குளித்து வர மூட்டுவலி, நாரிப்பிடிப்பு தணியும். (தொடரும்)

# குடாநாட்டு இளநீர் தென்னைகளில் பரவும் வெண்ணீ அவதானம் அவசியம் தேவை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

குடாநாட்டு தென்னைகளில் குறிப்பாக நல்லூரை அண்டிய பகுதிகளிலுள்ள இளநீர் தென்னைகள் சோபையிழந்து காணப்படுவதனை அவதானிக்கலாம். நின்று நிதானித்து அதனது இலைகளை அவதானியுங்கள்.

இலைகள் மஞ்சள் நிறமாக ஓலைக்கீற்றின் ஓரத்திலிருந்து உள்நோக்கி பரவலடைந்து சென்று இறுதியில் ஓலை கருகலடைவதனை அவதானிக்கலாம். இன்னும் ஓலை உள்ள பகுதியில் நிலத்தில் அவதானித்தால் மெல்லிய தூறல் விழுந்தது போல ஒட்டத்தக்கதான ஈரம் காணப்படும்.

இது மழைத்தூறலால் வந்த ஈரலிப்பு அல்ல. மாறாக இந்த தென்னை ஓலைகளில் தொற்றுதலாகி அதிலிருந்து சத்தை உறிஞ்சிக் குடிக்கும் ஒருவகை வெண்ணீயினுடைய தாக்கம் ஆகும். ஓலையை அசைத்துப் பார்த்தால் வெள்ளை நிறத்தில் இவ்வாறான சிறுபூச்சிகள் பறப்பதனை அவதானிக்கலாம். ஓலையின் பிற்புறத்தில் பார்த்தால் மடிந்துள்ள இதழுக்குள் வெண்ணீயினுடைய பருவங்களையும் குறிப்பாக நிறையுடலியையும் காண முடியும்.

சில இடங்களில் மழை பெய்ய தொடங்கியிருப்பதால் அவ்விடங்களில் பரவலும் தாக்கமும் குறைவாக இருப்பினும் குடாநாட்டின் அதிகரித்த வெப்பநிலை இப்பூச்சி விரைந்து பரவ, விருத்தியடைய ஏதுவாக இருக்கின்றது. வெண்ணீ என இதனை அழைப்பது நல்லது. ஏனெனில் வெள்ளை ஈ, என இதனை பிரித்துக் கூறக் கூடாது. ஈ என்பது இலையான் வகையைச் சேர்ந்த பூச்சியாகும். ஆனால் இந்த பூச்சி இலையான் வகையைச் சேர்ந்தது அல்ல. இது கெமிப்ரீறா வகையைச் சார்ந்த சாறு உறுஞ்சும் பூச்சியினமாகும். இருக்கின்ற குத்தியுறுஞ்சும் வாயுறுப்பினால் ஓலைக்குள் தனது வாயுறுப்பைச் செலுத்தி அதிலுள்ள சாற்றினை ஊறுஞ்சிக் கொள்வதால் அந்த இலைகள் முதலில் மஞ்சளாகி பின்னர் கருகத் தொடங்குகின்றன.

வெண்ணீ எப்படியிருக்கும்? இது ஒருவகை குத்தியுறுஞ்சும் வாயுறுப்பைக் கொண்ட மென்மையான பறக்கக்கூடிய சிறிய பூச்சி வகையாகும். குத்தியுறுஞ்சும் வாயுறுப்பினால் அதனது இளம்பருவமான அணங்கும் நிறையுடலியான வெண்ணீயும் இலையிலிருந்து சாற்றினைஉறுஞ்சிப் பெற்றுக் கொள்கின்றன. இதனால் இதனது வாய்ச்சுரப்பு அந்த உறுஞ்சுகின்ற இடங்களில் பரவுவதாலும் ஒளித்தொகுப்புக்குத் தேவையான பச்சையத்தை அகற்றுவதனாலும் இலைகள் மஞ்சளடையத் தொடங்கியிருக்கின்றன. பல இடங்களில் ஓலைகள் கருகி காணப்படுவதனையும் அவதானிக்கலாம்.

வெண்மை நிறமான இப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் முட்டை, அணங்கு, நிறைவுடலி என மூன்று நிலைகளைக் கொண்டிருக்கின்றது. இதில் அணங்கும் நிறைவுடலியும் குத்தியுறுஞ்சும் வாயுறுப்புக்களைக் கொண்டு சாற்றை உறுஞ்சுவதனால் அதிகளவில் ஓலை முழுக்க மஞ்சளடையும் தன்மை காணப்படுகின்றது. ஓலையின் கீழ்ப் பக்கத்திலுள்ள நிழலுக்குள் வசதியாக பல்கிப் பெருகி இந்த சேதத்தை ஏற்படுத்துவதனை அவதானிக்கலாம்.

காலநிலை மாற்றத்தின் ஒரு தாக்கமாகவும் இதனை அவதானிக்கலாம்.

(தொடரும்)

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 125

## பாதையை மாற்றிய பயணச்சீட்டு

சுமன் எப்போதும் தனியார் பேருந்திலே பாடசாலைக்கு செல்வதை விரும்புவான்.வீட்டிலும் அதற்கு மறுப்பு தெரிவிக்காமல் தினமும் பேருந்தில் செல்வதற்கான பணம் கொடுத்து விடுவார்கள். அவன் அவ்வப்போது கேட்கும் பணமும் முகம் சுளிக்காமல் கொடுப்பார்கள்.அவன் எண்ணம் முழுவதும் படிப்பிலேயே இருக்க வேண்டும் என்றும், பெரிய கல்விமானாக வரவேண்டும் என்றும் பெற்றவர்கள் விரும்பினார்கள்.

ஒவ்வொரு பேருந்து தரிப்பிடத்திலும் பேருந்து நிற்கும்போது இறங்கிவிடுவான். நடத்துநரின் விசில் சத்தம் கேட்டு பேருந்து கிளம்பும்போது வேகமாக ஓடி படியில் நின்று பயணிப்பான். நடத்துநர் திட்டுவதைக் காதில் வாங்கிக் கொள்ளவே மாட்டான். ஆனால் எப்போதும் ரிக்கெற் வாங்கியதே இல்லை. கூட்டமாக இருப்பதால் நடத்துநராலும் யார் யார் பற்றுச்சீட்டு எடுத்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. எப்போதாவது அவனைப் பார்த்து டிக்கெட் கேட்டால் ஏற்கனவே வாங்கி விட்டேனே என்று கூறிவிடுவான்.

இப்படியாக பேருந்தில் ரிக்கெற் எடுக்காமலும், பெற்றவர்க ளிடம் செலவுக்காக கேட்டு வாங்கும் பணத்திலும் பள்ளிக்கு செல்லாமல் கட் செய்துவிட்டு நண்பர்களோடு சினிமாவுக்கு சென்று தவறான பழக்கங்களுக்கும் அடிமை ஆனான்.

வழக்கம்போல் பயணம் தொடர்ந்தது. வயது முதிர்ந்த பெரியவ்ர் ஒருவர் ஏறினார். சுமன் படியில் நின்று கொண்டிருந்தான். ஒரே கூட்டம். நடத்துநர் பற்றுச்சீட்டு என்று கேட்டுத் தொந்தரவு செய்யவே, அன்று ஏமாற்ற வேண்டாம் என்று நினைத்த சுமன் மூன்று ரூபாய்க்கு ரிக்கெற் ஒன்று வாங்கிக் கொண்டான்.

அப்போது அந்த பெரியவர் ரிக்கெற்றுக்கான பணத்தை நீட்டினார். நடத்துநர் அவன் அருகில் இருந்ததால் பெரியவரின் அருகில் இருந்தவர்கள் ஒருவர் கை ஒருவர் மாற்றி கடைசியில் பணத்தை வாங்கி சுமனிடம் கொடுத்து, "தம்பி, பெரியவருக்கு மூன்று ரூபாய் பற்றுச்சீட்டு ஒன்று வாங்கிக் கொடுப்பா" என்றார்.

நடத்துநர் முன்புறம் பார்த்து பற்றுச்சீட்டு கேட்பதில் ஈடுபட்டிருந்தார். அதற்குள் அவன் இறங்க வேண்டிய இடமும் வந்தது. சட்டென தன்னிடம் இருந்த மூன்று ரூபாய் ரிக்கெறை எடுத்து பெரியவரிடம் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை தன் பையினுள் வைத்தான். அவன் இறங்கும் இடம் வர பரிசோதகர் இடையில் ஏறினார்.

"தம்பி,உன் பற்றுச்சீட்டைக் கொடு?"

" சேர் வந்து...." என்று சொல்லியபடி பையினுள் கையைவிட்டு பாசாங்கு செய்தான்.

"என்ன கிடைச்சுதா?" "இல்ல சேர், கூட்டத்துல எங்காச்சும் விழுந்திருக்குமோன்னு நினைக்கிறேன்..."

"இத்தனை பேரும் கூட்டத்துலதானே நின்னுகிட்டு வந்தாங்க. உன்னோட பற்றுச்சீட்டு மட்டும் எப்படி காணாமப்போச்சு?"

"இல்ல சேர், உண்மையிலேயே நான் பற்றுச்சீட்டு வாங்கி னேன்"

"அப்படின்னா அதைக் காட்டு, இல்லையென்றால் ரூபா 500 அபராதம் கட்டிட்டு போ"இல்ல பொலிஸ்கிட்ட ஒப்படை ச்சிடுவோம்.பேருந்திலிருந்து இறங்கிய சுமனின் ஆசிரியர் பரிசோதகரைப் பார்த்து ஐயா வணக்கம். நான் இவனோட தமிழ் ஆசிரியரும், வகுப்பு ஆசிரியரும் கூட.

இந்தப் பையன் ஒழுங்கீனமானவன். பள்ளிக்கு பல நாட்கள் கட் அடித்து, தகாத நண்பர்களுடன் ஊர் சுற்றித் திரிபவன். இவனுக்கு நாங்கள் கூறிய புத்திம்திகள் அனைத்தும் கடலில் பெய்த மழை போல வீணாயிற்று. இருந்தாலும் இவன் என் மாணவன் என்பதால் இவன் செயலுக்கு வெட்கப்பட்டு, நீங்கள் கேட்கும் அபராதத்தை நானே கட்டி விடுகிறேன்" என்று பணத்தை பரிசோதகரிடம் கொடுத்தார்.

நல்லொழுக்கம் போதிக்கும் ஆசிரியருக்கும், நற்பண்புகள் வளர்க்கும் கல்விக்கூடத்துக்கும் தன்னுடைய செயலால் கெட்ட பெயர் உண்டானதற்காக மனம் வருந்தி அழுது ஆசிரியரின் கால்களில் விழுந்தான் சுமன். அன்று மாலையே தன் பெற்றவர் களிடம் நடந்ததை மறைக்காமல் கூறி அவர்களிடம் தன் செயலுக்காக மன்னிப்பு கேட்டான். அத்துடன்தன் தந்தையை விட்டு தமிழ் ஆசிரியர் அபராதமாகச் செலுத்திய 500 ரூபாய் பணத்தையும் திருப்பிக் கொடுக்கச் சொன்னான் இப்போது பேருந்தில் ஏறிய உடனேயே முதல் ஆளாக ரிக்கெற் எடுப்பதுடன், படியில் நின்று பயணிப்பதையும் விட்டுவிட்டான் சுமன்.

# 40 எரிபொருள் நிலையங்கள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலனை



(கொழும்பு)

எரிபொருள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ள 40 எரிபொருள் நிலையங்கள், தம்மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விற்பனை நிறுத்தப்பட்டுள்ள 40 எரிபொருள் நிலையங்களின் விற்பனை இடைநிறுத்த உத்தரவை நீக்குவது தொடர்பாக மின்சக்தி மற்றும்எரிசக்திஅமைச்சு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

எவ்வாறாயினும், சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக அந்த 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு, எரிபொருளை விற்பனை செய்வதற்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் காஞ்சன தெரிவித்தார்.

கியூ.ஆர் குறியீட்டு முறைமைக்கு புறம்பாக தொடர்ந்தும் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டு வந்ததால், கடந்த 6 ஆம் திகதி முதல் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புத்தாண்டுக்கு மரக்கன்று நடுமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை கோரிக்கை

(கொழும்பு)

புத்தாண்டினை முன்னிட்டு ஒரு செடியை நட்டு, சுற்றுச்சூழலுக்கு பங்களிப்புச் செய்யுமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் அமுலில் இருக்கும் என சுற்றுச்சூழல் அதிகார சபை அறிவித்துள்ளது.

அதன்படி, மருத்துவச் செடிகள், பழ மரங்கள் என்பவற்றை நாட்டி இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை சுற்றுச்சூழல் அதிகார சபைக்கு அனுப்பலாம்.

மரங்களை நட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில் கணக்கெடுப்பு நடத்தி, மரங்களை முறையாக நட்டு பராமரித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். (நி)

# பணவீக்கம் உள்ள நாடுகளில் பத்தாவது இடத்தில் இலங்கை

## உலக வங்கி அறிக்கை வெளியீடு



(வோஷிங்டன்)

உலகில் அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடு களில் இலங்கை 10 ஆவது இடத்திற்கு பின் சென்றுள்ளதாக உலக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு செப்டெம்பரில், பணவீக்கம் உச்சத்தில் இருந்தபோது, சிம்பாவே மற்றும் லெபனானுக்கு அடுத்ததாக இலங்கை காணப்பட்டது.

இந் நிலையில், தற்போது 139% என்ற அளவில் உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கம் கொண்ட நாடாக லெபனான் பதிவாகியுள்ளது.

உணவுப் பணவீக்கம் 59 வீதத்துடன் இலங்கை, பட்டியலில் பத்தாவது இடத்தில் உள்ளதாக உலக வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 250 | 380 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 170 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 280 | 320 |
| தக்காளி | 100 | 100 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 120 | 120 | 160 |
| கரட் | 100 | 170 | 200 | 200 |
| பூசணி | 60 | 70 | 60 | 50 |
| புடோல் | 140 | 140 | 140 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 120 | 130 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 240 | 300 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 320 |
| லீக்ஸ் | 250 | 240 | 180 | 320 |
| பீற்றூட் | 130 | 200 | 140 | 150 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 350 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 800 | 1000 |
| போஞ்சி | 280 | 200 | 240 | 320 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 180 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 250 | 280 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 240 | 400 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 140 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 120 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 150





### முப்பத்தைந்தாம் அத்தியாயம் மந்திரவாதி

தூரத்தில் பேரிகைகளின் பெருமுழக்கம் கேட்டது. எக்காளங்கள் சப்தித்தன. மனிதர்களின் குரல்கள் ஜயகோஷம் செய்தன. கோட்டைக் கதவுகள் திறந்து மூடிக் கொள்ளும் சத்தமும் யானைகள் குதிரைகளின் காலடிச் சத்தமும் எழுந்தன.

நந்தினியின் கவனத்தை அந்தச் சத்தங்கள் கவர்ந்தன என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். காவல் புரிந்த தாதிப் பெண் திடுக்கிட்டு எழுந்து சற்று அருகில் வந்து, "அம்மா! எஜமான் வந்து விட்டார் போலிருக்கிறது" என்றாள்.

நந்தினி, "எனக்குத் தெரியும் நீ உன் இடத்துக்குப் போ!" என்றாள்.

பிறகு, வந்தியத்தேவனைப் பார்த்து, "தனாதிகாரி கோட்டையில் பிரவேசிக்கிறார். சக்கரவர்த்தியின் க்ஷேமத்தை விசாரித்து விட்டு, கோட்டைத் தளபதியைப் பார்த்துப் பேசிவிட்டு, இங்கே வருவார். வருவதற்குள் நீ போய்விட வேண்டும். ஆழ்வார்க்கடியார் கூறிய செய்தி என்ன?" என்று வினவினாள்.

"அம்மணி! அந்த வீர வைஷ்ணவ சிகாமணி தங்களை அவருடைய சகோதரி என்று சொல்லிக் கொண்டார் அது உண்மைதானா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"அதைப் பற்றி நீ ஏன் சந்தேகப்படுகிறாய்?"

"பச்சைக் கிளியும் கடுவன் குரங்கும் ஒரு தாயின் குழந்தைகள் என்றால் எளிதில் நம்ப முடியுமா?"

நந்தினி சிரித்துவிட்டு, "ஒரு விதத்தில் அவர் சொன்னது உண்மைதான். நாங்கள் ஒரே வீட்டில், ஒரே குடும்பத்தில் வளர்ந்தோம். உடன் பிறந்த தங்கையைப் போலவே என்னிடம் பிரியம் வைத்திருந்தார். பாவம்! அவருக்குப் பெரும் ஏமாற்றம் அளித்து விட்டேன்!"

"அப்படியானால் சரி! ஆழ்வார்க்கடியார் தங்களுக்குச் சொல்லி அனுப்பிய செய்தி கிருஷ்ணபகவான் தங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான். தாங்கள் கண்ணனை மணந்து கொள்ளும் கல்யாணக் காட்சியைப் பார்க்க வீர வைஷ்ணவ பக்தகோடிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்!"

நந்தினி ஒரு பெருமூச்சு விட்டாள். "ஆகா! இன்னும் அவருக்கு அந்தச் சபலம் நீங்கவில்லை போலிருக்கிறது! நீ அவரைப் பார்த்தால் எனக்காக இதைச் சொல்லி விடு. என்னை அடியோடு மறந்து விடச் சொல்லு! ஆண்டாளைப் போல் பரமபக்கதையாகக் கொஞ்சமும் தகுதியற்றவள் நான் என்று சொல்லு!"

"நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை, அம்மா!"

"என்னத்தை ஒப்புக் கொள்ளவில்லை?"

"தாங்கள் ஆண்டாள் ஆக முடியாது என்பதைத்தான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆண்டாள் பக்தி செய்து, பாட்டுப் பாடி, அழுது, கண்ணீர் விட்டு, பூமாலை தொடுத்துச் சூட்டி, இப்படியெல்லாம் செய்து கண்ணனை மணந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் தங்களுக்கு அத்தகைய கஷ்டமே தேவையில்லை. தங்களைக் கிருஷ்ண பகவான் பார்த்துவிட வேண்டியதுதான். ருக்மணி, சத்தியபாமாவையும் ராதையையும் கோபிகாஸ்திரீகளையும் உடனே கைவிட்டு அவர்கள் வீற்றிருந்த சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி உட்கார வைத்து விடுவார்!"

"ஐயா! நீர் முகஸ்துதி செய்வதில் சமர்த்தராயிருக்கிறீர். அது எனக்குப் பிடிப்பதேயில்லை."

"அம்மணி! முகஸ்துதி என்றால் என்னவோ?"

"முகத்துக்கு நேரே ஒருவரைப் புகழ்வதுதான்."

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மந்திரியான காக்கை அண்ணாச்சி



மங்கா தேவி கோட்டத்தின் கீழ்ப்பகுதியில் குமுளி மலைத் தொடரும் மேற்பகுதியில் தேக்கடி மலைத் தொடரும் காடுகளால் சூழப்பட்டு இருந்தன.

அன்று குமுளி மலைப் பகுதி காடு பரபரப்பாயிருந்தது. காரணம் காட்டுக்குள்ளே அன்று தேர்தல் நடந்தது.

மிருகங்களும் பறவைகளும் மற்றும் புழு பூச்சிகளும் கூட தேர்தலில் கலந்து கொண்டன.

வேங்கைப்பள்ளம் என்ற இடத்தில் இந்தத் தேர்தல் நடந்தது. தோதகத்தி மரங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் செந்நாய்கள் அதிகம் இருந்தன.

ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் இந்தத் தேர்தல். தேர்தலை இந்த முறை செந்நாய்கள் ஏற்பாடு செய்திருந்தன.

இந்தத் தேர்தலில் சுகாதார மந்திரிக்கு மட்டும் மும்முனைப் போட்டி வந்துவிட்டது. சுகாதார மந்திரிக்குப் போட்டி இடுபவர் தங்களை தூய்மையானவர்கள் என்று நிரூபிக்க வேண்டும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு ஓட்டு கிடைக்கும்.

சுகாதார மந்திரிப் பதவிக்கு பன்றியும் பட்டாம் பூச்சியும் காக்கையும் போட்டியிட்டன.

போட்டியைத் தவிர்க்க முயற்சி செய்தும் முடியாமல் போனது. எனவே ஓட்டு எடுப்பு நடத்துவது அவசியமாகி விட்டது.

சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குரங்கு தேர்தலை நடத்தியது. பல ஆண்டுகள் பிரதமராக இருந்த சிங்கம் வயதான காரணத்தால் சபாநாயகர் பதவிக்கு நின்று தோற்றுப் போனது.

காட்டரசுத் தலைவராக முயல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிரதமர் பதவிக்கு மட்டும் போட்டி கடுமையாக இருந்தது.

ஆரம்பத்தில் காட்டு எருமையை ஆதரித்த குரங்குகள் திடீரென்று செந்நாயை ஆதரித்தன. தவிர செந்நாய்கள் அராஜகத்திற்கு பயந்து மான்கள் முழுமையாக செந்நாயை ஆதரித்தன. செந்நாய் பிரதமராகி விட்டது.

நிதி மந்திரியாக வரிக்குதிரையும் பாதுகாப்பு மந்திரியாக ஓநாயும் உணவு மந்திரியாக கழுதையும் சொற்பமான ஓட்டு வித்தியாசத்தில் ஜெயித்தன.

வெளியுறவு மந்திரியாக எவ்வித போட்டியும் இன்றி நரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சபாநாயகர் குரங்கார், முதலில் பன்றியாரை அழைத்துத் தனது தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துக் கூறும்படி பணித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் யாசகனுக்கு மீனை இனாமாக வழங்குவதை விடச் சிறந்தது, மீனை எவ்வாறு பிடிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொடுப்பதே!

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிறுகைத்தொழில் முயற்சிகளுக்கு இந்தியத் தூதரகம் உதவ வேண்டும்

காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

காங்கேசன்துறைக்கும் தமிழகத்திலுள்ள காரைக்காலுக்கும் இடையில் இடம்பெறவுள்ள பயணிகள் கப்பல் சேவையானது மிகவும் பயனுடையதாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அதேநேரம் கப்பல் பயணத்தின்போது ஒருவர் நூறு கிலோ எடையுள்ள பொருட்களை தம்முடன் எடுத்துச் செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இடம்பெறும்போது, இரு தரப்பு உற்பத்தி வர்த்தக முயற்சிகள் விருத்தியடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பது பொருளியலாளர்களின் கருத்தாகவுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும்.

அதாவது தமிழகத்தின் உற்பத்தி வர்த்தக முயற்சி என்பது உச்சகட்டத்தைத் தொட்டு நிற்கிறது.

ஆனால் வடமாகாணத்தைப் பொறுத்தவரை சாதாரண சிறுகைத்தொழில் முயற்சிகளோ அன்றி குடிசைக் கைத்தொழில்களோ இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

பொதுவில் இலங்கையில் சைவ ஆலயங்களில் பயன்படுத்தப்படும் பிரசாதப் பொருட்களாக திருநீறு, சந்தனம், குங்குமம் என்பன தொடக்கம் கடவுள் திருவுருவங்களுக்கு சாத்துகின்ற பட்டாடைகள், பட்டுத்துணிகள், அபிஷேகப் பொருட்கள் என அனைத்தும் தமிழகத்திலிருந்தே இலங்கைக்கு கொண்டு வரப்படுகிறது.

அதாவது சைவ மக்கள் அணிகின்ற விபூதி என்பது உரிய விதிமுறைகளுக்கு அமைய பசுஞ்சாணத்தில் தயாரிக்கப்படுவதாகும்.

இருந்தும் குறித்த திருநீற்றை உற்பத்தி செய்து அவற்றை ஆலயங்களுக்கு வழங்குகின்ற முயற்சிகூட, நம் மத்தியில் ஏற்படவில்லை.

மாறாக அந்த விபூதியும் தமிழகத்திலிருந்தே பெற்றுக் கொள்ளப்படுகிறது.

இதேபோல சிறுசிறு பட்டுத்துணிகளில் தைக்கப்படும் கடவுள் விக்கிரகங்களுக்கான ஆடைகளும் தமிழகத்திலிருந்தே எடுக்கப்படுகின்றன.

பொதுவில் வட மாகாணத்தில் எத்தனையோ தையல் நிலையங்கள் இருக்கின்றபோதிலும் அப்படியான முயற்சிகளில் நம்மவர்கள் ஈடுபடவேயில்லை.

இதுபற்றி அவர்களுடன் கதைத்தால், மூலப்பொருட்களை எடுக்க முடியவில்லை என்று கூறிக் கொள்கிறார்கள்.

எனவே காங்கேசன்துறைக்கும் தமிழகத்துக்குமான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை இடம்பெறும்போது, நம் வட மாகாணத்தில் சிறுகைத்தொழில் முயற்சிகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை தமிழகத்திலிருந்து பெற்றுக் கொண்டு இங்கு சிறுகைத் தொழில் முயற்சிகள் மற்றும் குடிசைக் கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் உதவி செய்ய வேண்டும்.

அவ்வாறு உதவி செய்வதன் மூலம் எங்கள் தாயக மண்ணில் சாதாரண மக்கள் சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஆர்வம் காட்டத் தலைப்படுவர்.

அந்த நிலைமையானது நிச்சயம் காத்திரமான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தும்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அனுமதித்தால் நாட்டின் நிலைமை மோசமடையும்

## சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அனுமதிக்கப்பட்டால் நாட்டில் மிக மோசமான நிலைமை ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. குறிப்பாக பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு வரையறை அற்ற அதிகாரம் வழங்குவது மிகவும் பயங்கரமானது என சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஊடாக பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வரையறை இல்லாத அதிகாரம்வழங்கி இருக்கிறது.

இது மிகவும் பயங்கரமானது.அதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. குறித்த சட்ட மூலத்தின் பிரகாரம் பயங்கரவாதத்தை தடுப்பது என்ற அடிப்படையில் சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்து 90 நாட்கள் பிரதி பொலிஸ்மா அதிபரின் அனுமதியுடன் தடுத்துவைக்க முடியும்.

அத்துடன் சட்டத்தின் பிரகாரம் குறித்த சந்தேக நபரை 48 மணி நேரத்துக்கு முன்னர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினாலும் 90 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவை நீக்குவதற்கு நீதிவானுக்கு முடியாது.

நீதிபதியை தாண்டிய அதிகாரமே பிரதி பொலிஸ்மா அதிபருக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக வழங்கப்படுகிறது.

அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தின் பிரதான பிரச்சினையாக இருப்பது பயங்கரவாதம் என்றால் என்ன என வரையறுக்கப்படுவதில் இருக்கும் தெளிவின்மையாகும்.

அதேநேரம் பல்வேறு அமைப்புகளை தடை செய்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம்வழங்கும்வகையில் உறுப்புரைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு பல விடயங்கள் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்றார். (ம-7,9)

### பாரதி முன்பள்ளியின் விளையாட்டு விழா

பாரதி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பாரதி சனசமூக நிலையத் தலைவர் வே.அருளானந்தம் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு பாரதி முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கு.அரிகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7,9)

## 3 ஆயிரத்து 820 தொன் யூரியா உரம் விவசாய அமைச்சிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் கொள்வனவு செய்யப்பட்ட 3 ஆயிரத்து 820 தொன் யூரியா உரம், இலங்கையின் சிறு நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்கில் இன்று விவசாய அமைச்சிடம்ஒப்படைக்கப்பட்டது.

பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ள 72,200க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இந்த பசளை அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட நெல் உற்பத்தியாளர்களிடையே ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவ மூலோபாயத்தை அறிமுகப்படுத்துவதற்கு இது ஆதரவளிக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.(ம-7,9)

## வாகன விபத்துக்களால் இவ் வருடம் 564 பேர் பலி

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார் அந்த காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் 1,345 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்த விபத்துக்களில் 2,446 பேர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (ம-7,9)

## சுற்றுலா பயணங்கள் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் பகிராதீர்

### பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

ஏப்ரல் விடுமுறை காலத்தின்போது, வெளிப்புறசுற்றுப் பயணங்கள் பற்றிய விவரங்களை சமூக ஊடக தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனை தெரிவித்தார்.

இந்தகாலப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்கள் இந்த தகவல்களைப் பயன்படுத்தி வீடுகளில் கொள்ளையடிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். மேலும், வீடுகளைவிட்டு வெளியே வருபவர்கள் தங்கள் சிசிடிவி கமராக்களை இயக்கவும்,

கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க காட்சிகளை கண்காணிக்குமாறும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக் கொண்டார். (ம-7,9)

## பருத்தித்துறையில் விபத்து இரு சிறுவர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் நேற்று இடம் பெற்ற விபத்தில் இரு சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வீட்டிலிருந்து வீதிக்கு மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டு சென்றபோது அது வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது. காயமடைந்த இரு சிறுவர்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர். விபத்துக்கு உள்ளான இரு சிறுவர்களும் 14 மற்றும் 17 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்து தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

## துணைவேந்தர் பதவிக்கு புதிய சுற்றுநிருபம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவு நியமங்களை உள்ளடக்கிய புதிய சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இந்தச் சுற்று நிருபம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய சுற்று நிருபத்தினால் பதலீடு செய்யப்பட்டிருந்தது.

அதன்பின்னர், துணைவேந்தர் நியமனம் குறித்த புதிய சுற்று நிருபம் வெளியிடப்படும் வரையில் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் துணை வேந்தர் தெரிவுக்கான நடைமுறைகளை இடைநிறுத்தி வைக்குமாறு பெப்ரவரி 10 ஆம் திகதி பல்கலைக் கழகமானியங்கள்ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருந்தார். இந்நிலையில் புதிய சுற்று நிருபம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சோப கிருது' வருஷ வருஷப்பிறப்புக் கருமங்கள்

### சோப கிருது வருஷ ஜாதகம் வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு | சூரி புதன் ராகு | சுக் | செவ் |
| சனி | புது வருஷ கிரக நிலை | | லக்கினம் |
| சந் | | | |
| | | கேது | |

**வாக்கிய பஞ்சாங்கம்**

சோப கிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் திகதி (14.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 மணி 03 நிமிடத்தில் அபரபக்க நவமித் திதியில் திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சாத்தியம் நாமயோகத்தில்,கரசக் கரணத்தில் கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் காலவோரையில், செவ்வாய் சூக்குமவோரையில், சாத்வீக குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய மயில் சாலுத் தொழிலும், சூக்கும பட்சி அரசுத் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய "சோப கிருது" வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 10.03 மணி முதல் அன்று பிற்பகல் 6.03 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புன்கிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளைக் கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து, வைரம் இணைந்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்கினேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதர்மங்களையாற்றி குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி சேர்த்த ருந்தி தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள்,பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரித்து புதிய வருஷப் பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து தூய தவத்தாற் பெற்ற மானிடப் பிறவியில் இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

சோபகிருது வருஷம் சித்திரை மாதம் 01 ஆம் நாள் (14.04.2023) வெள்ளிக் கிழமை பகல் 2.59 மணிக்கு "சோப கிருது" எனும் பெயருடைய தமிழ்ப் புது வருடம் உதயமாகின்றது. இது 60 வருஷ சுற்று வட்டத்தில் 37 ஆவது வருஷமாகும்.அந்நேரம் நட்சத்திரம் திருவோணம் 2 ஆம் பாதம். திதி - அபரபட்ச நவமி, அசுபயோகம் அன்று

### சோபகிருது வருஷ ஜாதகம் திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| குரு-28-10 நெப்-02-01 | சூரி-00-00 ராகு-10-33 புதன்-18-58 யுரே-23-19 | சுக் 09-32 | செவ் 15-53 |
| சனி-09-51 | புது வருஷ கிரக நிலை | | |
| சந்-13-25 | | | 10-12 லக்கினம் |
| | | 10-33 கேது | |

பகல் 10.59 மணி முதல் பிற்பகல் 6.59 மணிவரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் சிங்கம் ஆகும்.

அனைவரும் சித்திரை 01 ஆம் திகதி அதிகாலையில் துயிலெழுந்து மேற்படி புண்ணிய காலத்தில் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, வெண்ணிற பட்டாடையாயினும் அல்லது மஞ்சள் கரையமைந்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்களை அணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குல தெய்வங்களைத் தரிசனம் செய்து இயன்ற தானங்கள் வழங்கி புது வருஷ சூரியனுக்கு பொங்கல், பூசை வழிபாடுகள் மேற்கொண்டு குரு,பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று இயன்ற தானாதிகள் வழங்கி பிதிர் விதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று சுற்றமித்திரர்களிடருந்து கடுகு தாளிதம் செய்த புளியோதரை, தயிரன்னம், நெல்லிக்காய்த் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போசனம் செய்து தாம்பூலம் அருந்தி சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புதுவருஷத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

**மருத்து நீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஸ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர்,வில்வம்,அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள்,மிளகு, திற்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொள்க.

**சோபகிருது தன்னிற் றொல்லுலகெல்லாஞ் செழிக்குங்**
**கோபமகன்று குணம் பெருகுஞ்-சோபனங்கள்**
**உண்டாகு மாரி பொழியாமற் பெய்யுமெல்லா**
**முண்டாகு மென்றே யுரை**

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை,புனர்பூசம் 1ஆம் 2 ஆம் 3ஆம் கால்கள், அத்தம், உத்தரடாம் 2ஆம்,3ஆம்,4ஆம் கால்கள், திருவோணம்,அவிட்டம் 1 ஆம் 2ஆம் கால்கள் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தானதர்மங்களைச் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

### கைவிஷேடம்- வாக்கிய பஞ்சாங்கம்

15.04.2023 சனி முற்பகல் 7.52 மணிமுதல் 9.00 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 7.49 மணிமுதல் 9.48 மணிவரை

### கைவிஷேடம்- திருக்கணித பஞ்சாங்கம்

15.04.2023 சனி காலை 6.45 மணிமுதல் 7.30 மணிவரை
15.04.2023 சனி முற்பகல் 8.00 மணிமுதல் 8.55 மணிவரை
16.04.2023 ஞாயிறு முற்பகல் 8.00 மணிமுதல் 9.30 மணிவரை
16.04.2023 ஞாயிறு பிற்பகல் 12.10 மணிமுதல் 01.15 மணிவரை

# பூச்சிக்கொல்லி கட்டுப்பாட்டு சட்டத்தை உடனடியாக திருத்துமாறு பணிப்பு



(கொழும்பு)

பூச்சிக்கொல்லி கட்டுப்பாட்டு சட்டத்தை உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பூச்சிக்கொல்லி பதிவாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த தீர்மானம் நாட்டில் போலியான மற்றும் தரமற்ற பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை விறபனை செய்யும் மோசடி காரணமாக எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள சட்டங்களின படி, தரமற்ற பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக் கொல்லிகளை விற்பனை செய்தல், நாட்டிற்கு கடத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை சட்ட விரோதமாக இறக்குமதி செய்தல் தொடர்பான அபராதம் மற்றும் சிறைத்தண்டனைகள் அந்த கடத்தல்காரர்களுக்கு போதுமான் தாக்கத்தை ஏற்படுத்தாது.

இலங்கைக்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படும் தரமற்ற களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை கடத்துபவர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.1.5 மில்லியன் அபராதம் அல்லது மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும் வகையில், திருத்தப்பட்டு, புதிய சரத்துக்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப பிட்டுள்ளார்.

இந்நிலையில் பூச்சிக் கொல்லிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகளுக்கு கொள்வனவு செய்ய முடியாத நிலையில் , பூச்சிக்கொல்லி மற்றும் களைக் கொல்லிகளை 20 கிராம் பாக்கெட்டுகளில் சந்தைக்கு வெளியிட அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற இடங்களில் திடீர் சோதனை நடத்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பூச்சிக்கொல்லி பதிவாளர் அலுவலக அதிகாரிகள் அடங்கிய குழுக்களை ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# நாட்டை பின்னோக்கி நகர்த்த சதி செய்யாதீர்- பந்துல வேண்டுகோள்



(கொழும்பு)

வீழ்ச்சியடைந்திருந்த இலங்கை, ஜனாதிபதியின் சிறந்த நடவடிக்கைகளால் முன்னோக்கிச் செல்லும் நிலையில் எமது நாட்டை பின்னோக்கி நகர்த்த எவரும் சதி செய்யக்கூடாது என போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடன் உதவியின் கீழ் இலங்கைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட 26 புதிய பேருந்துகளை கண்டி மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடு மீதும் மக்கள் மீதும் அக்கறை உள்ளவர்கள் சதி முயற்சிகளுக்குத் துணை போக மாட்டார்கள்.கடந்த வருடத்தை விட இந்த வருட புத்தாண்டு மிகவும் சுபமானதாக அமைந்திருக்கின்றது.

அடுத்த வருடத்தை இன்னும் சிறப்பாக மாற்ற வேண்டிய பாரிய பொறுப்பு முழு இலங்கை மக்களுக்கு இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறி...

இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மன்றுக்கு தெரியப்படுத்தினர்.

குறித்த கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்திய மன்று குறித்த வழக்கை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், இது தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் மன்று கட்டளை பிறப்பித்திருந்தது. (ம-7,9,250)

## மட்டுவிலில்...

தென்மராட்சி - மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 59 வயதான திருச்செல்வம் என்ற நபர் தனது முகத் தாடியின் பலத்தை மாத்திரம் பிரயோகித்து 1 கிலோ மீற்றர் தூரம் பட்டா வாகனத்தை இழுத்து சாகசம் நிகழ்த்தியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு தனது சாகச பயணத்தை மட்டுவில் சந்திரபுரம் சிவன் கோவிலடிக்கு அண்மையில் ஆரம்பித்து பிற்பகல் 5.30 மணியளவில் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் தனது பயணத்தை நிறைவு செய்திருந்தார்.

இதன்போது வீதிகளில் ஏற்றம், இறக்கம் என பல தடைகளையும் தாண்டி அவர் தனது சாகசப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார். (ம-7,9,30)

## சாதாரண தர...

மே 15ஆம் திகதி, 2022ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தற்போது குறித்த பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சாதாரண தரப் பரீட்சைக்கான புதிய திகதி எதிர்வரும் மே 29ஆம் திகதி அறிவிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## மன்னாரில்...

நீண்ட நாட்களாக இரு குடும்பத்துக்குள் நிலவிய பிரச்சினையே படுகொலைக்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,285)

## உள்ளூராட்சி...

இடையில் நேற்று இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, நிதி அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைகளுக்கு நீதி வழங்குவதாக பிரதமர் உறுதியளித்துள்ளார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பிரதமருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி வரை ஊதியம் வழங்குவது குறித்தும், அதற்குப் பிறகும் ஊதியம் வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-7,9)

## நீதிமன்ற வழக்கு...

நீதிமன்றத்தில் வழக்கு முடியும் வரை வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் தலையிட முடியாது என அமைச்சர் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ம-7,9,250)

## வெடுக்குநாறி தொடர்...

பேச்சு நடத்தியுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று மாலை குறித்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

இச்சந்திப்பில் இந்து மாமன்றத்தின் தலைவர், இந்து மாமன்றத்தின் பொருளாளர், திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் மற்றும் வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட 8 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது, குருந்தூர் மலையில் சைவ சமய வழிபாடுகள் [illegible] நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் விகாரை நிறுவப்பட்ட விடயம் தொடர்பிலும் அதனைத் தொடர்ந்து வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் இந்திய துணைத் தூதருக்கு தெளிவுபடுத்தப்பட்டதுடன், எல்லையோரக் கிராமங்களில் இடம்பெறும் பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்றங்களின் விஸ்தரிப்பு தொடர்பிலும் இந்திய உயர்ஸ்தானிகருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய வழிபாடுகள் மற்றும் தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் ஊடாக ஏற்படுத்தப்பட்டு வரும் அச்சுறுத்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் வாக்லே, இவை தொடர்பில் உரியவர்களுடன் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார். (ம-7,9,250)

## இந்தியத்...

நேற்று கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்தில் வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர், உட்பட வவுனியாவை சேர்ந்த இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், கொழும்பு இந்துமாமன்றப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு இந்திய தூதுவரை சந்தித்திருந்தது.

இந்நிலையில் தம்மாலான செயற்பாடுகளை மேற்கொள்ள தாம் முனைப்பு காட்டுவோம் என இந்திய தூதுவர் குறித்த குழுவிடம் தெரிவித்ததாக வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

குறித்த சந்திப்பு தமக்கு திருப்தியாக அமைந்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ம-7,9,250)

## அரிய...

தெரியப்படுத்தியிருந்தனர்.

இதையடுத்து யாழ்ப்பாணப்பிராந்தியத் தொல்லியல் திணைக்கழக அதிகாரிகளில் ஒருவரான விஸ்வலிங்கம் மணிமாறனும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கணேசலிங்கம் ஜெயதீஸ்வரனும் அவ்விடத்திற்குச் சென்று உரிய முறையில் இக்கல்வெட்டைமைப் பிரதி எடுத்து [illegible] எழுத்து வத்தை வெள்ளிக் கொணர்ந்துள்ளனர்.

ஓம் என்ற மங்கல மொழியுடன் தொடங்கும் ஏறத்தாழ மூன்றடி உயரமும் ஒரு அடி அகலமும் கொண்ட இக்கல்வெட்டு பத்து வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது.

இது இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னால் பொறிக்கப்பட்ட கல்வெட்டாக இருக்கலாம் என்பதை அவற்றின் எழுத்தமைதி கொண்டு உறுதிப்படுத்த முடிகின்றது.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த சு.சபாபதிப்பிள்ளை என்ற பெரியவரால் 'இக்கிராம மக்களினதும், கால்நடைகளினதும் நன்மை கருதி அமைக்கப்பட்ட வயற்கேணி மடம் பற்றிக் கூறியிருப்பதை இரு ஆய்வாளரும் உறுதிப்படுத்தியுள்ளனர்

இவ்வாசகம் உண்மையென்பதை இக்கல்வெட்டுடன் காணப்படும் பெரிய கேணி, ஆவுரஞ்சிகல் என்பன உறுதிப்படுத்துகின்றன. இவற்றுடன் மடமும், சுமைதாங்கியும் இருந்ததாக மக்கள் கூறும் செய்தியை அவ்விடத்தில் காணப்படும் கட்டட அழிபாடுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன. (ம-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1541
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 7 9 8 7 5 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1116
H 05 10 24 43
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 3328
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 03 23 24 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1434
E 08 02 30 65 69

HANDAHANA
திகதி 2023.04.10
சீட்டிழுப்பு இலக்கம் 395
ரிஷபம் 18 30 33 46 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/10
சீட்டிழுப்பு இலக்கம் 5086
Y 4 1 5 5 6 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2061
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.04.10
தினம் திங்கட்கிழமை
N 07 21 26 64
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,025,320/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.10
சீட்டிழுப்பு இல : 4222
வர்ணம் : இள நீலம்
ரூ. 5,506,320/-
10 24 33 51 V

ராசி
திகதி 2023-04-10
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,186,303/-
வெற்றி வாரம் 3773
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 11 14 22 49 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,996,440/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 39 12 31 47 55
சீட்டிழுப்பு வாரம் 1237
60048 49124 1983
திகதி 2023.04.10 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 322,771,785.40

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1912
சீட்டிழுப்பு திகதி 2023-04-10
வெற்றி இலக்கங்கள் 51 53 66 70 F
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 41,843,468.40
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1887
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.04.10
ரூ. 4,909,360/-
03 45 49 67 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15214)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15196)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**


## சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் 116வது குருபூசைத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

# திறந்த கட்டுரைப்போட்டி - 2023

### திறந்த கட்டுரைப்போட்டிக்கான தலைப்புக்கள்

1. சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையை ஆவணப்படுத்தல். எம்முன்னுள்ள சவால்களும் - சாத்தியங்களும்
2. இளவயது அவ மரணங்களைத் தடுத்தல். எம்முன்னுள்ள பொறுப்புகளும் கடமைகளும்
3. எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அதிலிருந்து மீண்டெழுதலும். எம்முன்னுள்ள தெரிவுகள்
4. இலங்கையின் சட்ட வலுவாக்கமும் அதன் சமகாலப் போக்குகளும்.
5. போதைப்பொருள் பாவனையின் அதிகரிப்பும் அதன் சமூக பண்பாட்டு விளைவுகளும்.

### கட்டுரைப்போட்டிக்கான அறிவுறுத்தல்கள்

- தரப்பட்ட தலைப்புக்களில் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.
- 1000 - 1200 சொற்களுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும். தெளிவான கையெழுத்துப்பிரதியாகவோ அல்லது அச்சுப்பிரதியாகவோ அமையலாம்.
- போட்டியாளர் பெயர், முகவரி, தொ.பே.இலக்கம், தே.அ.அ.இலக்கம் என்பன தனியொரு தாளில் குறிக்கப்பட்டு கட்டுரையுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- கட்டுரை சொந்த ஆக்கமாக அமைதல் வேண்டும்.
- கட்டுரைப்போட்டிக்கான முடிவுத்திகதி 17.04.2023.
- கட்டுரைகள் செயலாளர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
- வெற்றியீட்டிய முதல் மூன்று போட்டியாளர்கள் சதாவதானியின் 116வது ஆண்டு விழாவில் (29.04.2023) சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். மேலும் 5 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

**கட்டுரைப்போட்டிக்கான பரிசு விபரம்:**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | : ரூபாய் 20,000.00 |
| இரண்டாம் பரிசு | : ரூபாய் 15,000.00 |
| மூன்றாம் பரிசு | : ரூபாய் 10,000.00 |
| ஆறுதல் பரிசு | : ரூபாய் 5,000.00 |

(15216)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு**
**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(15215)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 814 7389, 077 986 5457**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6332)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6332)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777



## கையடக்கத் தொலைபேசியைக் காணவில்லை

05.04.2023 புலோலியில் உள்ள திருமண நிகழ்வில் ஆலயம் ஒன்றில் S-22 வகையைச் சேர்ந்த (SAMSUNG) சாம்சுங் கறுப்பு நிற கையடக்கத் தொலைபேசி தவறவிடப்பட்டுள்ளது. இத் தொலைபேசியில் கைவிரல் அடையாளம், பாதுகாப்பு கட்டுப்பாடுகள் என்பன இருப்பதால் மீழ் பாவனைக்கு உட்படுத்த முடியாது. எனவே இத் தொலைபேசியை உரியவரிடம் ஒப்படைத்தால் பெரிய தொகையான சன்மானம் வழங்கப்படும். (C-6333)

**+44 9756374596**
**077 122 6785**
**077 395 4128**


# லக்னோ திரில் வெற்றி



பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் லக்னோ அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

முதலில் பேட் செய்த பெங்களூரு அணி 20 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 212 ரன்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 213 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ... தெரிவானார்.(ம)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15196)

**076 739 0413, 076 436 5814**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் 86 பரப்பு காணி விற்பனைக்குண்டு.(நெற்பரப்பு)

- கோப்பாய் தெற்கு இருபாலையில் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு முன் அமைந்து காணப்படுகிறது.
- நன்னீரூற்று இடம்
- கடை, திருமண மண்டபம் கட்டுவதற்கு உகந்த இடம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15182)

**076 841 6574, 077 326 0502**



## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

**பழைய கட்டடம் விற்பனைக்கு**

சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர் இல்லத்தின் (ஆண்கள்) விடுதியில் 150'x20' விஸ்தீரணமுள்ள பழைய கட்டடத்தின் பகுதியளவு பயன்படு பொருட்களுக்குக் கேள்வி கோரப்படுகிறது. நேரடியாகப் பார்வையிட்டு கூறுவிலையை 17.04.2023 இற்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

திரு. லோ. துஷிகரன்
செயலாளர்

(C-6331)

தொடர்புகளுக்கு : 021 222 6525, 077 083 7567



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு)
42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15196)

**076 755 8606**
**077 638 5683**



## யப்பான் சைக்கிள்

**அறிவுள்ளோரின் தெரிவு**

1. லேடீஸ் சைக்கிள்கள்
2. யென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. மவுண்டன் சைக்கிள்கள்

விலைக்குறைப்பு 35000/= இருந்து



இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு.
கழுவிப் பூட்டுதல்,
திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.



விற்பனைக்கு பிந்திய சேவைகள்
திருத்த வேலைகள், கழுவிப்பூட்டுதல் வேலைகள் என்பனவும் செய்யப்படும்

(15198)

**யப்பான் சைக்கிள் B பசார்**

கந்தரோடை றோட், சுன்னாகம் (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 400m தூரத்தில்)

078 615 5929


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.